1986 ஏப்ரல் 26]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பெயரால் அறிவியல் ஆய்வுக்கூடம் நிறுவவும் பெரியார் சொன்ன முற்போக்குக் கருத்துக்களை ஆய்வு செய்ய விரும்பி முன்வருவோருக்கு பல்கலைக்கழகத்தில் வாய்ப்பளிக் கப்படுமா ? மேலும் பெரியார் இதயம் எங்கேயிருக்கிறது ? பெரியார் இதயத்தை எல்லோரும் பார்ப்பதற்கு வழிவகை செய் யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலை வர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

நலிந்த தொழிற்சாலைக்கான வரையறை.

444—(*வினா எண். 1831)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ' நலிந்த தொழிற்சாலை ' (Sick Industry) என்பதற்கு தற்போது உள்ள அளவுகோலை மாற்றி அமைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

(முற்பகல் 9-30).

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நலிந்த ஆலைகளுக்கு உதவி செய் வதற்காக ''தமிழ்நாடு ரிலீப் அன்டர்டேக்கிங் ஆக்ட்'' உரு வாக்கப்பட்டு, அதன்படி நலிவுற்ற ஆலைகளுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அந்த அடிப்படையில் எத் தனை ஆலைகள் அரசின் உதவி கோரி வந்துள்ளன என்ற விவ ரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இது வரை நலிவுற்ற 43 சிறு தொழில்களுக்கு 71 இலட்சம் ரூபாய் உதவிப் பணம் வழங்கப்பட்டிருக்கின்றது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தபின் காப்பதை விட, வருமுன் காப்பது மேல் என்ற அடிப்படையில் நலிவுற்ற பிறகு உதவுவது என்பதை விட

நலிவுறுவதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து, அதற்கு முன்பாகவே உதவுகின்ற வகையில் அதை மானிட்டர் செய்வதற்கு ஏதாவது ஏஜென்சி அல்லது அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றதா? அப்படி இல்லையெனில், இனிமேலாவது அப்படிப்பட்ட ஏஜென்சி முறையை உருவாக்குவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராசாராம்: தலைவர் அவர்களே, 'State Level Co-ordination Committee for marginal assistance to sick small-scale units' என்ற அமைப்பு இருக்கிறது. அது நலிவுற்றதற்கான காரணங்களை ஆராய்ந்து ஆவன செய்து வருகிறது.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல நிலையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆலைகளின் நிதியை எடுத்து, பிற பெரும் தொழில்களில் முதலீடு செய்து விட்டு, அவற்றை நலிந்த ஆலையாக்கி, அரசாங்க நிதி உதவி பெறுகின்ற நோக்கத்தோடு, இதே முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற தொழில் நிறுவனங்களைக் கண்காணிக்கவும், கவனிக்கவும் அரசு விசேஷ நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராசாராம்: தலைவர் அவர்களே இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஆனால் தொழில் நலிவுற்றதா என்பதைப் பார்ப்பதற்கு ஒரு குழுவை நியமித்திருக்கிறோம். மூன்று காரணங்கள் இருந்தால், அது நலிவுற்றது என்று கருதி, அதைப்பற்றி ஆராயும். தொழில் நிறுவனம் தான் பெற்ற கடனுக்கான வட்டியை 6 கால் ஆண்டுகள் செலுத்தாவிட்டாலும், தொழில் நிறுவனத்தை மூடி விட்டாலும் அல்லது விற்று விட்டாலும், தொழில் நிறுவனம் பண உதவி பெற்று குறிப்பிட்ட காலத்திற்குள் மேம்பாடு அடையாவிட்டாலும் இவைகளை நலிவுற்ற நிறுவனங்களாக அரசு கருதுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே குறிப்பாக கேட்கப்பட்டிருப்பது, சிக் இண்டஸ்ட்ரி அதாவது நலிவுற்ற தொழிற்சாலைக்கான என்ன அளவுகோலை அரசு வைத்திருக்கிறது? அது தான் ஸ்பெசிபிக்கான கேள்வி. இந்தக் கேள்வியின் நோக்கமே, சிக் வருவதற்கு முன்பாகவே அதைத் தடுத்து நிறுத்தி, அரசுப் பணத்தை அங்கே கொண்டு போய் போடுவதற்கான சூழ்நிலை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது. நல்ல யூனிட்டை மூடி விட்டு அதிக லாபம் கிடைக்கிற நிறுவனத்திற்குப் போய் விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். மிஸ்-மானேஜ்மெண்ட் தான் இன்றைக்கு முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. இப்படி மிஸ்-மானேஜ்மெண்ட் செய்யப்படும் தொழிற்சாலைகள் ஏராளமாக செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அதைத் தடுக்கக்கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தக் குழு இதுவரை என்னென்ன நடவடிக்கைகளை,

1986 ஏப்ரல் 26]

எடுத்திருக்கிறார்கள்? முற்றிலும் மூடப்படுவதற்கு முன்பு முன்னெச்சரிக்கையாக அதைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலை நலிவுற்றதா என்று கண்டுபிடிப்பதற்கு சாத்தியக் கூறுகள் அதிகம் இல்லை. காரணம், ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இது ஒன்று. இரண்டாவதாக, வட்டி கட்டாமல் இருக்கும் போது தான் அது நம்முடைய கவனத்திற்கு வருகிறது. 6 காலாண்டுகளுக்கு வட்டி செலுத்தாவிட்டால், நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். மீண்டும் திறந்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்கிறோம். அப்படி ஆராய்ந்த பிறகு தான் நலிவுற்றதாக அறிவிக்கிறோம். திடீரென்று அறிவிப்பதில்லை.

தைல மரத்திலிருந்து காகித உற்பத்தி.

445—(*வினா எண். 5111)—திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) யூகலிப்டஸ் (தைல மரம்) மரத்தைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) யூகலிப்டஸ் வைரபிரிட் என்னும் தைல மரத்தை பயன்படுத்தி திருவாளர் சேஷசாயி காகித தொழிற்சாலை மற்றும் தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் காகிதம் லிமிடெட் நிறுவனத்தினரால் காகிதம் தயாரிக்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில் திருவாளர்கள் சேஷசாயி நிறுவனத்திற்கு தமிழ்நாடு வனத் துறை மற்றும் வனத் தோட்டக் கழகத்திலிருந்து கீழ்க்கண்ட அளவில் மூலப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

	வனத் துறை.	வனத் தோட்டக் கழகம்.
யூகலிப்டஸ் ஹைபிரிட் ..	35,000	30,000
யூகலிப்டஸ் கிராண்டிஸ் ..	15,000	30,000
பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மரங்கள்.	15,000	15,00
மூங்கில்	15,000	30,000